# வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

வடக்கு மாகாண பொதுச்சேவையின் மாகாண மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு **அட்டவணை –I** இல் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 28.12.2020 ஆகும்.

- **நிலவும் வெற்றிட விபரம் மொழி மூல ரீதியாக (அட்டவணை –I )**

| இல | மொழிபெயர்ப்பாளர் மொழிமூலம் | மொழிமூல இல | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ் - சிங்களம்) | I | 10 |
| 02 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம் - சிங்களம்) | II | 03 |
| மொத்தம் | | | 13 |

## 02. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

02.1 வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மாகாண மொழிபெயர்ப்பாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ஆம் இலக்க **2013.07.03**ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் ஆட்சேர்ப்புக் காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மொழிபெயர்ப்பாளர் பதவியின் தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

02.2 திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று(03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு மொழிபெயர்ப்பாளர் பதவியின் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

02.3 இச்சேவைகள் இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

02.4 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை **அட்டவணை –I** இல் காட்டப்பட்டவாறாகும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## 03. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 6 – 2016** க்கு ஏற்ப **மொழிபெயர்ப்பாளர்** பதவியின் தரம் - II ற்கான திரட்டிய சம்பள விகிதமானது **ரூபா36,585 – 10 x 660 - 11 x 755 - 15 x 930– 65,440/-**ஆகும். (ரூபா 38,565/-என்ற சம்பள படிநிலைக்கு முன் 1வது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும்)

## 04. பொதுவான தகைமைகள் :-

04.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

04.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04.3 அ) விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராகவும், இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் உள்ள **ஆறு (06)** ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது **மூன்று (03)** ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருப்பவராக இருத்தல்

**அல்லது**

ஆ) விண்ணப்பதாரா் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது **ஐந்து (05)** வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

இ) மேற்படி பந்தி **அ, ஆ** இல் குறிப்பிடப்படாத (வடக்கு மாகாணத்தை சாராத) வேறு மாகாணங்களை வசிப்பிடமாக கொண்ட விண்ணப்பதாரர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக் முடியும். எனினும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த தகைமையுடைய விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர் உள்ள வெற்றிடத்திற்கே, ஏனைய மாகாணங்களில் வசிக்கும் தகைமையுடைய விண்ணப்பதாரர்களின் மொத்தப்புள்ளிகளின் உயர்புள்ளி ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் **வடக்கு மாகாணத்தினுள் தொடர்ச்சியாக அல்லது இடமாற்றமின்றி *05* வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும்** என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

04.4 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று (28.12.2020) அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

04.5 விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **இருபத்தொரு (21) வயதிற்கு குறையாதவராகவும்,முப்பத்தைந்து (35) வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள்:-

### 05.1 மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் - தமிழ்) :-

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மொழியினை அல்லது சிங்கள மொழியினை ஒரு பாடமாக கொண்டு சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் **அல்லது** பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) பட்டத்திற்கு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் **அல்லது** பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **மொழிபெயர்ப்புக் கல்வியை** ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் **அத்துடன்** க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் **அத்துடன்** க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி பட்டம் (பண்டிதர்) பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் தமிழ் மொழியில் சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05.2 மொழிபெயர்பாளர் (சிங்களம் - ஆங்கிலம்) :-

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்கள மொழியினை அல்லது ஆங்கில மொழியினை ஒரு பாடமாக கொண்டு சித்தியடைந்து பெறப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும் **அல்லது** பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) பட்டத்திற்கு சிங்கள மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் **அல்லது** பட்டத்திற்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்த விண்ணப்பதாரிகள், க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் **மொழிபெயர்ப்புக் கல்வியை** ஒரு பாடமாகச் சித்தியடைந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் **அத்துடன்** சிங்கள மொழி மற்றும் இலக்கியத்திற்கு திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் **அத்துடன்** க.பொ.த. (உ.த.) பரீட்சையில் சிங்கள மொழியில் குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(3) இலங்கை கீழைத்தேய மொழி ஊக்குவிப்புச் சங்கத்தில் இறுதி பட்டம் (பண்டிதர்) பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழி / ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்கு குறைந்தது சாதாரண சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 06 ஆட்சேர்ப்பு முறை :-

06.1 எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

06.2 மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் வரிசை ஒழுங்கில் நிலவும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்படுவர்.

06.3 வெற்றிடத்தின் 03% *விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத்திறனாளிகளுக்காக)* **ஒதுக்கப்படும்.** பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல்/உள தகைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

06.4 அ) இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நேர்முகத் தேர்விற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகள் இப் போட்டிப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

**ஆ)** எனினும் வடக்கு மாகாணத்தினை வதிவிடமாகக்கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்தப்புள்ளிகளின் உயர்புள்ளி ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்கமைய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின், எஞ்சிய வெற்றிடங்களுக்கே ஏனைய மாகாணத்தினை வதிவிடமாகக் கொண்டவர்களின் மொத்தப்புள்ளிகளின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கின் அடிப்படையில் ***வடக்கு மாகாணத்தினுள் தொடர்ச்சியாக அல்லது இடமாற்றமின்றி 05 வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும்*** என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

## 07. பரீட்சைக் கட்டணம் :-

விண்ணப்பதாரி தான்வதியும் பிரதேசத்தில் அமைந்துள்ள எந்தவொரு **அஞ்சல் அலுவலகத்திலும்** ரூபா 500.00 ஐ **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** என்ற பெயருக்கு **யாழ்ப்பாணத் தபால் அலுவலகத்தில்** மாற்றக்கூடியவாறாக காசுக்கட்டளையினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். காசுக்கட்டளைக்குரிய பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படவும்மாட்டாது.

## 08. விண்ணப்பிக்கும் முறை :-

08.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீx29செ.மீ) தாளின் 1 முதல்10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும், மிகுதி மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை 28.12.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

08.2 ஒன்றிற்கு மேற்பட்ட மொழிபெயர்ப்பாளர் மொழி மூலத்திற்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுள்ளவர்கள், ஒரேயொரு விண்ணப்பப் படித்தினை மட்டும் பூரணப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன், இதற்குரிய பரீட்சைக் கட்டணத்தை ஒரு தடவை மட்டும் செலுத்துதல் போதுமானதாகும்.

08.3 விண்ணப்பம் அனுப்பிவைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"*வடக்கு மாகாண பொதுச்சேவைக்கு மாகாண மொழிபெயர்பாளர் சேவையின் மொழி பெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை –2020*"** எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

08.4 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணபத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முற்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

08.5 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் **மூன்று (03)** நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி பின்வரும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.
(தொலைபேசி இல -021 221 9939, தொலைநகல் இல - 021 221 9940)

***தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-***

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி, மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

08.6 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது.

## 09.ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :-

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை*
(ii) *செல்லுபடியான இலங்கை கடவுச்சீட்டு.*
(iii) *செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.*

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## 10.பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென நியமனத்தின் பின் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியபிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா *498,960.00* க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12.பரீட்சைத் திட்டம் :-

இவ் எழுத்துப் பரீட்சையானது கீழ்க் குறிப்பிட்டவாறான **நான்கு (04)** வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் என்பதுடன். இப்பரீட்சையானது ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளர் மொழி மூலத்திற்கும் அமைவாக நடாத்தப்படும். இவ் எழுத்துப் பரீட்சையில் தோற்றிய எந்தவொரு பரீட்சார்த்திக்கும் மீள்திருத்தத்திற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை.

12.1 ஆட்சேர்ப்புப் பரீட்சைக்குரிய பாடங்கள் :- (அட்டவணை **–II**)

| மொழி பெயர்ப்பாளர் மொழிமூலம் | வினாப்பத்திரம் | காலம் | மொத்த புள்ளிகள் | சித்தியடைய தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|
| மொழி பெயர்ப்பாளர் (தமிழ் - சிங்களம்) | 1.மொழிபெயர்ப்பு- தமிழிலிருந்து சிங்களத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 2.மொழிபெயர்ப்பு- சிங்களத்திலிருந்து தமிழிற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 3.தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| | 4.சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் - ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு- சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 2.மொழிபெயர்ப்பு- ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 3.சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| | 4.ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |

12.2 பாடங்களுக்குரிய பாடப்பரப்புக்கள் :- (அட்டவணை **–III**)

| மொழி பெயர்ப்பாளர் மொழி மூலம் | வினாப்பத்திரம் | பாடப்பரப்பு |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ் - சிங்களம்) | 1. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று (03) பந்திகளை சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று (03) பந்திகளை தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல் |
| | 4. தமிழ் மொழி | கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் தனி வாக்கியங்களை பகுத்தாய்தல். |

| | | |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் -ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு.- சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று (03) பந்திகளை சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு.- ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | நிர்வாக, சட்ட, விஞ்ஞான, தொழிநுட்ப, கலை, இலக்கிய மற்றும் சமய ஆவணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று (03) பந்திகளை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்தல். |
| | 3. சிங்கள மொழி | கட்டுரை எழுதுதல், சாராம்சம் எழுதுதல், தரப்பட்ட பந்தியொன்றை சுருக்கமாகத் தமது சொற்களில் தெரிவித்தல், சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், வாக்கியங்களிலிருந்து இலக்கணப் பிழைகளை திருத்துதல், பேச்சு வழக்குகளை விளக்குதல், எழுத்துக்கூட்டல். |
| | 4. ஆங்கில மொழி | கட்டுரை எழுதுதல், தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள் விளங்குமாறு வாக்கியங்கள் அமைத்தல், பேச்சு வழக்குகளை விளக்குதல், கூட்டு மற்றும் தனி வாக்கியங்களை பகுத்தாய்தல். |

13. பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

14. இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

15. இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபை இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**சி.திருவாகரன்.**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
02.12.2020